## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (4)

# மறையாத வடுக்களும்; மரத்தின் நிலையான வளர்ச்சியும்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

கொண்டு கழகத்தைக் கண் போல் காத்தோர் ஒரு புறம் – கட்டுப்பாடு மீறி காட்டிக் கொடுத்தோர் ஒரு புறம் – கட்சியைப் பயன்படுத்தி வளர நினைத்தோர் ஒரு புறம் – எனினும், பெரும்பான்மை இளைஞர் பட்டாளத்தினர் வலிவு பெற்று வளர்ந்தது இந்தக் கழகம்.

ஒரு நிகழ்ச்சியில் நமது வீரமணி எனக்கு நினைவூட்டிய அந்த உவமையைப் பற்றிச் சொன்னேன் அல்லவா! என்ன உவமை அது?

**“ஒரு தென்னங்கன்றை நட்டுத் தினந்தோறும் நீர் ஊற்றி வளர்க்கிறோம். மூன்று நான்கு மாதங்கள் சென்று ஒரு மட்டை காய்ந்து உலர்ந்து மரத்திலிருந்து விழுந்து விடுகிறது. தென்னையிலிருந்து மட்டை விழுந்தாலும், அந்த மட்டையிருந்த இடத்தில் ஏற்பட்ட “வடு” மறைவதில்லை. அந்த வடுவும் கால் வைத்து ஏறிடத் தோதாகவே அமைகிறது. இப்படி ஒவ்வொரு மட்டையாக வளர்ந்து வளர்ந்து, தென்னை மர வளர்ச்சிக்கும் பயன்பட்டு; இறுதியாக உலர்ந்து விழுந்து விட்ட போதிலும், அந்த மரத்தில் ஏறுவதற்கு உதவிடும் படிகள் போல அந்த வடுக்கள் அமைந்து உதவிடுகின்றன அல்லவா?”**

இதைத்தான் நான் ஒரு நிகழ்ச்சியில் உவமையாகத் தெரிவித்து விளக்கினேன். அதற்குப் பொருள், ஒரு இயக்கத்தின் வளர்ச்சி என்பது, அந்த இயக்கத்தின் முன்னோடிகள் தந்திடும் உழைப்பும், தியாகமும் தான் – அவர்கள் அமைத்த படிக்கட்டுகள் தான், தென்னை மரத்தின் வடுக்கள் போன்றவை. மட்டை விழுந்தாலும் மரத்தை வளர்க்கிறது என்பதை, அந்த மறையாத வடுக்கள் சாட்சியாக இருந்து நிரூபிக்கின்றன அல்லவா? இதனை உணர்ந்தால் எப்போதுமே இளைஞர்களும், மூத்தோர்களும் ஓர் இயக்க வளர்ச்சிக்கு இரு வகையில் தேவை என்பதை உணர முடியும்.

குறுந்தொடராக வரும் இந்தக் கடிதத் தொகுப்பில் கொள்கைக் குறிக்கோளுடன் நமது திராவிடர் இயக்கம் வளர்ந்த நிலையையும் அதன் தொடக்கத்தையும் தெரிந்து கொள்வோம்.

1936ஆம் ஆண்டு திருவாரூர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் கஸ்தூரி ஐயங்கார். அவர் தனது அறையில் உட்கார்ந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். பன்னிரண்டு வயதுள்ள ஒரு பையன் திடீரென்று அவரது அறையினுள்ளே ஓடுகிறான். வாயிலில் “பங்கா” இழுத்துக் கொண்டிருந்த “பியூன்” தடுத்தும் கேட்கவில்லை. தலைமை ஆசிரியர் அந்த இளைஞனைக் கண்டு திகைக்கிறார்.

“யார்? யாரப்பா? என்ன வேணும் நோக்கு?” என்று கேட்டபடி எழுகிறார்.

“சார், என்னை எப்படியாவது இந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்” என்கிறான் பையன்.

“எந்த வகுப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும்? எதில் சேருவதானாலும் பரிட்சை எழுதியாக வேண்டும்”

“பரிட்சை எல்லாம் எழுதிவிட்டேன் சார். முதலில் இரண்டாம் படிவப் (II Form) பரிட்சை எழுதினேன். பிறகு முதல் படிவப் பரிட்சை எழுதினேன். இப்போது ஐந்தாம் வகுப்பில் கூட எனக்கு இடமில்லை என்கிறார்கள்”

“ஏன் இப்படி மேலேயிருந்து கீழே எழுதிக் கொண்டு வந்தாய்?”

“என் கிராமத்து ஆசிரியர் என்னை இரண்டாம் படிவத்தில் ((II Form) சேர்ப்பதாக உறுதியளித்து அழைத்துவந்தார். அதை நம்பி என் தந்தையும் வந்தார். ஆனால் கிராம ஆசிரியர் அளித்த பயிற்சி அப்படி!”

“அதற்கு நான் என்ன செய்வது தம்பி?”

“உயர்நிலைப் பள்ளியில் சேராமல் ஊருக்குத் திரும்பினால், எல்லோரும் கேலி செய்வார்கள். எப்படியாவது ஐந்தாம் வகுப்பில் என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள்!”

“இடமில்லை என்று சொன்ன பிறகு எப்படியப்பா முடியும்? முடியாதப்பா முடியாது!”

“முடியாதா? இதோ உங்கள் கண் முன்னாலேயே எதிரே உள்ள தெப்பக் குளத்தில் விழுந்து சாகப் போகிறேன்!”

இதைச் சொல்லியபடி பையன் கண் கலங்க நின்றான். தலைமை ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. அவருடைய நினைவில் எதிரேயுள்ள கமலாலயம் என்ற புகழ் பெற்ற தெப்பக்குளம் சுழன்றது. கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி என்று பாராட்டப் பெறும் திருக்குளம் அது. அதன் பாசி பிடித்த படிக்கட்டுகளில் வழுக்கி விழுந்து எத்தனையோ பேர் முழுகிப் போயிருக்கிறார்கள். வேண்டுமென்றே பலர் அந்தக் குளத்தில் விழுந்து தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டுமிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குளத்தைப் பற்றிப் பையன் சொன்னதும் தலைமை ஆசிரியர் அதிர்ச்சியடைந்துதான் போனார். சிறிது யோசித்தார். பிறகு பையனைத் தட்டிக் கொடுத்தார். ஐந்தாம் வகுப்பில் அவனுக்கு இடம் கிடைத்து விட்டது. “வெற்றி” என்றபடி வெளியே ஓடி வந்தான். ஆசையோடு நின்று கொண்டிருந்த அவனது அருமைத் தந்தையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கூத்தாடினான். ஐந்தாம் வகுப்பில் முதன்மையான மார்க்குகள் பெற்று அந்த ஆண்டு அந்தப் பையன் வெற்றி பெற்றான். அவன் வேறு யாருமல்ல! நானே தான் என்பதைக் கூறத் தேவையில்லை!

என்னுடைய உயர்நிலைப் பள்ளி வாழ்க்கையின் ஒரு தொடக்கச் சம்பவம் தான் அது. ஐந்தாம் வகுப்பில் “பனகல் அரசர்” என்ற தலைப்புள்ள (Non-Detail) புத்தகம் துணைப் பாடக் கட்டுரையாக எங்களுக்கு வைக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ ஐம்பது பக்கங்கள் இருக்கும். வகுப்பிலே நான் ஒருவன்தான், அந்தச் சிறு நூல் முழுவதையும் அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவிப்பேன். அந்தப் பனகல் அரசர் என்ற புத்தகம்தான் எனக்கு அரசியல் அரிச்சுவடியாகக் கூட அமைந்தது எனலாம்.

திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமையேற்று, அவர்களது தளையகற்றப் பெரும்பணியாற்றி, அரசியல் சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் அவர்களுக்கு இடமளிக்க சர். பிட்டி. தியாகராயர், டாக்டர் நடேச முதலியார், டாக்டர் டி.எம். நாயர், பனகல் அரசர், ஆகியோர் ஒன்று கூடி, 1916ஆம் ஆண்டு நவம்பர் திங்கள், சென்னையில், “தென்னிந்திய நல உரிமைச் சங்கம்” எனும் பெயரால் ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவித்தனர். அந்தக் கட்சியின் கொள்கைகளை வெளியிடவும், பரப்பவும், டாக்டர் நாயரை ஆசிரியராகக் கொண்டு “ஜஸ்டிஸ்” என்ற பெயருடன் ஓர் ஆங்கில நாளிதழும், பக்தவத்சலம் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு “திராவிடன்” என்னும் தமிழ் நாளிதழும், ஏ.சி. பார்த்தசாரதி நாயுடுவை ஆசிரியராகக் கொண்டு “ஆந்திரப் பிரகாசினி” எனும் தெலுங்கு இதழும் தொடங்கப் பெற்றன. மெல்ல மெல்ல ஆங்கிலப் பத்திரிகையின் பெயரிலேயே கட்சியின் பெயரும் “ஜஸ்டிஸ்” கட்சி என்று அழைக்கப்படும் நிலை பெற்றுவிட்டது.

இந்திய வைஸ்ராய் செம்ஸ்ஃபோர்டு பிரபுவும், இந்தியா மந்திரி மாண்டேகு பிரபுவும், 1917ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் சென்னை வந்த போது, ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள், திராவிடர்களின் நிலையை விளக்கி ஓர் அறிக்கையை முன் வைத்தனர். அப்போது நடந்த “ஹோம்ரூல்” இயக்கத்தின் திட்டங்களை விட, ஜஸ்டிஸ் கட்சியினர் விடுத்த அறிக்கையே திராவிட சமுதாயத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்தியது. பின்னடைந்த, தாழ்த்தப்பட்ட சமுதாயங்களின் அவல நிலையை அந்த அறிக்கைதான் விளக்கியது. இந்த அறிக்கைக்குப் பிறகு, தாழ்த்தப்பட்ட மக்கள் ஜஸ்டிஸ் கட்சி என்ற நீதிக் கட்சியில் இணைந்து செயல் புரிந்தனர்.

என். சிவராஜ், எம்.சி.ராஜா, இரட்டைமலை சீனிவாசன் போன்ற பெருந் தலைவர்கள் எல்லாம் நீதிக் கட்சியின் மூலமாக நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஒளியேற்றிட முன் வந்தனர். 1919ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 17ஆம் நாள், டாக்டர் நாயர் லண்டன் மாநகரத்தில் மறைவு எய்தினார். இந்த இழப்பால் நீதிக் கட்சி பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியது. 1920 நவம்பர் 2–ம் நாள் இந்தியாவில் முதல் பொதுத்தேர்தலை நடத்தும்படி மாண்டேகு–செம்ஸ் ஃபோர்டு சீர்திருத்தம் கூறியது. அந்தத் தேர்தலில் கலந்து கொள்வது என்று நீதிக் கட்சி முடிவு செய்தது. அன்னிபெசண்ட் அம்மையார் நடத்திய “ஹோம்ரூல்” இயக்கம் நீதிக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டது. காந்தியடிகள் காங்கிரசைத் தேர்தலில் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை.

அப்போதைய சென்னை மாநிலத் தேர்தலில், நீதிக் கட்சி, மிகப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது. கட்சித் தலைவரான தியாகராயரை அழைத்து, மந்திரிசபை அமைக்குமாறு மாநில கவர்னர் வெலிங்டன் பிரபு கேட்டுக் கொண்டார். தியாகராயர் தனக்கு அமைச்சர் பதவி வேண்டாமெனக் கூறிவிட்டு, ஏ.சுப்பராயலு ரெட்டியாரை முதல் மந்திரியாகவும், பனகல் அரசரை இரண்டாவது மந்திரியாகவும், சர். கே.வி. ரெட்டியாரை மூன்றாவது மந்திரியாகவும் நியமித்தார். சர். பி. ராசகோபாலாச்சாரியார் சட்ட சபைத் தலைவராக கவர்னரால் நியமிக்கப்பட்டார். இது தான் சென்னையில் முதன் முதல் தோன்றிய மந்திரிசபை.

**அன்புள்ள**

**மு.க.**

(முரசொலி – 11.11.2007)

## மக்களை நாடி குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண

# ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ என்ற புதிய திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 25 –

மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் ‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்” என்ற புதிய திட்டம் ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அரசினால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள் மக்களைச் சரியாகச் சென்று அடைகின்றனவா? பல்வேறு துறைகளால் வழங்கப்படுகின்ற சேவைகள் மக்களுக்கு முறையாகக் கிடைக்கின்றனவா? என்பதை முதலமைச்சரே களத்திற்கு நேரடியாகச் சென்று, ஆய்வில் ஈடுபட்டு, அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டு, கள அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தையும் நடத்தி உரிய அறிவுரைகளை வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட திட்டம் தான் “களத்தில் முதல்வர் திட்டம்”.

“மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய்” என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கும் திட்டம் இது.



மக்களுக்காக செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்கள் மக்களின் நலனையும் முன்னேற்றத்தையும் மையமாகக் கொண்டு தீட்டப்படுகின்றன; செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் பலன் மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டியதும், மக்கள் அரசு நலத் திட்டங்களின் முழுப்பலனையும் அடைவதிலுள்ள இடர்ப்பாடுகளைக் களைய வேண்டியதும் அரசு இயந்திரத்தின் முதன்மையான பணி ஆகும்.

**மாவட்ட ஆட்சியர் வட்ட அளவில் ஆய்வு!**

அரசு இயந்திரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், மக்களைத் தேடிச் சென்று பணியாற்ற வேண்டும். மக்களையும் அரசையும் இணைக்கும் பாலமாகச் செயல்பட்டு வருபவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள். ஒவ்வொரு கிராமத்தில் வசிக்கும் மக்களும் தங்கள் கிராம முன்னேற்றத்துக்கும், அரசு தொடர்பாக தனக்கிருக்கும் பிரச்சினை களுக்கும், தீர்வை நாடிச் செல்லும் நபர் மாவட்ட ஆட்சித் தலைவர். தங்கள் அருகில் இருக்கும் பிற அதிகாரிகள் அன்புக்குரியவராக இருப்பினும், மக்களின் மகத்தான அன்புக்கும், ஆதரவுக்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக மாவட்ட ஆட்சியர்களைப் பார்க்கிறார்கள். மாவட்ட ஆட்சியர்களிடம் திங்கட்கிழமை தோறும் வந்து மனு அளிக்கிறார்கள். மாவட்ட ஆட்சியர் பதவியின் கம்பீரம் மக்களைக் கலவரம் அடையச் செய்வதில்லை, மாறாக கவர்ந்திழுக்கிறது.

‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்” திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்டம் அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளேன்.

**அண்ணாவின் கனவுத் திட்டம்!**

இந்தத்திட்டம், ‘களத்தில் முதல்வர்’ திட்டத்தின் அடுத்தகட்டம் எனலாம்; மக்களிடம் செல் என்று சொன்ன அண்ணாவின் கனவுத்திட்டம் என்றும் சொல்லலாம்.

உங்களை நாடி, உங்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் வருகிறது. நானும் அரசு இயந்திரமும் களத்திற்கு வருகிறோம். கவனமுடன் உங்கள் குறை கேட்போம்; களத்திலேயே தீர்வு காண்போம்; மக்களின் கவலையைப் போக்குவோம்; மகத்தான தமிழ்நாட்டை உருவாக்குவோம்.

‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்” என்ற இந்த புதிய திட்டம் வரும் டிசம்பர் மாதம் தொடங்கப்படும்.

மேற்கண்டவாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

